**வேளாங்கண்ணி:**

புகழ்மிக்க கத்தோலிக்கப் பிரிவினரின் புனித ஆலயமான ஆரோக்கிய மாதா ஆலயம். இதுவும் சமயம் சமரசம் உலாவும் இடமாகத் திகழ்கின்றது.

**ஸ்ரீரங்கம்:**

கொள்ளிடம், காவிரிக்கு நடுவே தீவில் அமைந்துள்ளது. முதன்மையான வைணவத் திருத்தலம் - 22 கோபுரங்கள் - 51 பரிவார தேவதைகள் சந்நிதிகள் - 1748 -இல் கிருஷ்ண தேவராயரால் முதல் மண்டபக் கதவுகளுக்கு பொன்தகடு பொருத்தப்பட்டது. இராமானுஜ கூடம் இங்குள்ளது.

**குணசீலம்:**

திருச்சியிலிருந்து 17 மீட்டர் தொலைவில் முசிறி சாலையில் அமைந்துள்ள வைணவத் திருத்தலம் - இங்கு வந்து தங்கினால் மனநோயாளிகள் குணமாவதாக நம்பப்படுகிறது.

**முக்கொம்பு:**

திருச்சி - கரூர் சாலையில் 20 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. இங்கு முக்கொம்பு மேலணை உள்ளது. காவிரி, கொள்ளிடம், அய்யங்கால்வாய் என மூன்று பிரிவுகளாக காவிரியாறு பிரியுமிடத்திலுள்ளதால் முக்கொம்பு எனப்படுகின்றது. இஃது ஓர் ஓய்வுநேர மகிழ்ச்சிச் சுற்றுலாத் தலமாகும்.

**சித்தன்னவாசல்:**

புதுக்கோட்டையிலிருந்து 16 கி.மீட்டர். இங்குள்ள குகையில் பிராமி கல்வெட்டுகள், ஓவியங்கள் உள்ளன. சமணப் படுக்கைகளும், குகைக் கோயில்களும் உண்டு. சமண தீர்த்தங்கரர்களின் உருவங்கள் உள்ளன. மற்றொரு பக்கத்தில் பல்லவர் குடைவரைகோயிலில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

**நார்த்தா மலை:**

விஜயாலயச் சோழீஸ்வரம் என்ற பெயரில் விஜயாலயச் சோழனால் கட்டப்பட்ட முதல் கற்றிருக்கோயில் உள்ளது. இங்கு முத்தரையர்களின் கலைப் படைப்புகளையும் காணலாம்.

**விராலிமலை:**

திருச்சி - மதுரை சாலையில் உள்ளது. முருகன் ஸ்தலம், மயில்கள் அதிகம். இரவு பூசையில் சுப்பிரமணியருக்கு சுருட்டு வைத்து பூசை செய்கின்றனர்.

Scanned by CamScanner

**திருமயம்:**

புதுக்கோட்டை - காரைக்குடி சாலையில் உள்ளது. 1687-இல் விஜயரகுநாத சேதுபதி இங்குள்ள கோட்டையைக் கட்டினார். இம்மலைச் சரிவில் சிவன், விஷ்ணுவுக்கென தனித்தனி சன்னதிகளை உடைய பல்லவர்குடைவரை கோயில் ஒன்று உள்ளது. இங்குள்ள கல்வெட்டு, நந்திவர்மம் பல்லவன் காலத்தில் இவ்வாலயத்திற்கு குடமுழுக்குச் செய்த செய்தியைத் தெரிவிக்கின்றது.

**ஆவுடையார் கோயில்:**

அறந்தாங்கியிலிருந்து 12 கி.மீட்டர் தொலைவிலுள்ள சிவஸ்தலம். திருப்பெருந்துறை எனப்படுவது. மாணிக்கவாசக சுவாமிகளுடன் தொடர்புடையது. அவரை ஆட்கொண்டதலம். இங்கு கருவறையில் உருவங்கள் ஏதுமின்றி இறைவன் அருபியாக வணங்கப்படுகின்றார். மதியம் பெரிய கல்லில் வெண்சோறு ஆவிபரக்க நைவேத்தியமாகப் படைக்கப்படுகின்றது. புகழ்மிக்க சிற்பங்கள், அபூர்வ வேலைப்பாடுடைய கொடுங்கைகள், தூண்களில் காணப்படும வரிக்கோடு அமைப்புகள், காஞ்சிபுரம் பட்டுப் புடவைகளுக்கான ஆதாரங்களாக விளங்குகின்றன.

**வேந்தன்பட்டி:**

பொன்னமராவதிக்கு அருகில் அமைந்துள்ள சிவஸ்தலம். இங்குள்ள நந்தி நெய்நந்தீசுவரர் எனப்படுகிறது. இங்கு பிரதோஷ காலத்தில் நந்திக்கு அபிஷேகம் செய்யப்படும் நெய் அப்படியே உறைய விட்டுவிடப்படுகிறது. ஆனால் அதன் மீது ஈ, எறும்பு படராதிருப்பது அதிசயமே.

**கோபால்பட்டினம்:**

புதுக்கோட்டையிலிருந்து 91 கி.மீட்டரில் அமைந்துள்ள கடற்கரைப்பகுதி; பொழுதுபோக்குமிடம்.

**பிள்ளையார்பட்டி:**

குடைவரைகோயில்; ஸ்ரீநகரத்தார் கோயில். இங்குள்ள கற்பக விநாயகர் புகழ்மிக்கவர். வேதபாடசாலையும் உள்ளது.

**மதுரை:**

மாரியம்மன் தெப்பக்குளம்; மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்; இம்மையில் நன்மை தருவார் - கூடலழகர் கோயில்கள் - காந்தி மியூசியம், திருமலை நாயக்கர் மகால், புதுமண்டபம் அருகிலுள்ள திருமாலிருஞ் சோலை, திருப்பரங்

குன்றம் கோயில்கள், திருமோகூர் மற்றும் திருவாதவூர் திருத்தலங்கள், திருக்கோஷ்டியூர் சௌமிய நாராயணப் பெருமாள் கோயில்.

**சுருளிப்பட்டி:**

சுருளியருவி - மதுரை, கம்பம் சாலையில் செல்லவேண்டும்.

**குச்சனூர்:**

சனிபகவானுக்குரிய ஸ்தலம் - தேனியிலிருந்து சுமார் 35 கிமீட்டர்

**கும்பக்கரை:**

பெரிய குளத்திலிருந்து ஆறு கி.மீட்டரில் உள்ளது. கும்பக்கரை நீர்வீழ்ச்சி - ஓய்வு எடுக்க சிறந்த இடம்.

**கொடைக்கானல்:**

மலை வாசஸ்தலம் - கடல் மட்டத்திலிருந்து 2133 கிமீட்டர் உயரம் - 1914இல் மலைச்சாலை அமைக்கப்பட்டது. வத்தலக்குண்டிலிருந்து சுமார் 55 கி.மீட்டர் 1863இல் சர்விரி என்ரிலிங் கே என்பவரால் உருவாக்கப்பட்ட ஏரி - படகுத்துறை - பிரையாண்ட் பூங்கா - கோக்கர் நடைபாதை - இயற்கையை கண்குளிர ரசிக்க உதவும். தற்கொலைப்பாறை - பில்லர் ராக்ஸ் என்ற தூண் பாறைகள் - குறிஞ்சியாண்டவர் கோயில் - செண்பகனூர் கத்தோலிக்கப் பாதிரிமார் பயிற்சிக் கல்லூரி, சில்வர் கேஸ்கெட், பியர் சோலா அருவிகள், பேரிஜம் ஏரி - அன்னை தெரசா மகளிர்பல்கலைக்கழகம்.

**ஏற்காடு:**

கோடை வாசஸ்தலம் - கடல் மட்டத்திலிருந்து 4330 அடி உயரம். 1820-இல் கேப்ரன் என்ற ஆங்கிலேயர் அங்கு 'கிராஞ்ச்' என்னும் கட்டடத்தைக் கட்டிக் குடியேறினார். 1893-இல் மலைச்சாலை முழுமையாக அமைக்கப்பட்டது. சேர்வராயன் கோயில், சீமாட்டி மேடை, ஆடவர் மேடை, பக்கோடா பாயிண்ட், கிள்ளியூர் நீர்வீழ்ச்சி

**நாமககல்:**

கோட்டை - 20 அடி உயர ஆஞ்சநேயர் - குடைவரை விஷ்ணுக்கோயில்

**டாப்ஸ்லிப்:**

பொள்ளாச்சியிலிருந்து 37 கி.மீட்டர் தென்மேற்கே உள்ளது. இங்குதான் ஆனைமலை வனவிலங்குச் சரணாலயம் உள்ளது. சுற்றுலாத் தலம்.

Scanned by CamScanner

**திருமூர்த்தி மலை:**

மலையடிவாரம் - அருவி, திருமூர்த்தி அணை சுற்றுலா ஓய்விடம்.

**வெள்ளியங்கிரி மலை:**

மிக உயர்ந்த சிவஸ்தலம். (ஆண்கள் மட்டுமே செல்லலாம்.)

**உதகமண்டலம்.**

கோடை வாசஸ்தலம் - தாவரவியல் பூங்கா. 1824-இல் சல்லிவன் என்னும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரால் கட்டப்பட்ட ஏரி - மான் பூங்கா - தொட்டபெட்டா மலைச்சிகரம் (263 மீட்டர் உயரம்) - வெஸ்டர்ன் கேட்ச்மெண்ட், ஸ்னோ டவுன் நகரம்.

**குன்னூர்:**

சிம்ஸ்பூங்கா - பாஸ்டர் இன்ஸ்டிடியூட் - லேம்ஸ் பாறை, டால்பின்ஸ் நோஸ்

**கோத்தகிரி:**

கொடனாட் வியூ பாயிண்ட் - ரங்கசாமி தூண், லாஸ் அருவி

**கன்னியாகுமரி:**

குமரிமுனை - மூன்று கடல்கள் சேருமிடம் - விவேகானந்தர் பாறை - வள்ளுவர் சிலை - பகவதியம்மன் கோயில்

## 23. தமிழக – பறவைகள் சரணாலயங்கள்

**பழவேற்காடு:**

சென்னைக்கருகில் உள்ளது - மழைக்காலத்தில் பறவைகள் வருகை காரணமாக பறவைகள் சரணாலயம் ஆனது.

**வேடந்தாங்கல்:**

சென்னையிலிருந்து 85 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. வேடந்தாங்கல் ஏரி - 74 ஏக்கர் பரப்புள்ள ஏரி- அக்டோபர் முதல் பறவைகள் வருகின்றன - பன்னாட்டுப் பறவைகள் சரணாலயம்.

**புழலேரி:**

சென்னையிலிருந்து 6 கி.மீட்டா தொலைவில் உள்ளது. அக்டோபர் - மார்ச் வரை அதிக அளவில் பறவைகள் வருகின்றன.

**கரிக்கிலி:**

வேடந்தாங்கலிலிருந்து 5 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. நீர் பறவைகள் சரணாலயம்.

**கோடிக்கரை:**

Scanned by CamScanner

பறவைகள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்கள் - குதிரைகள், கலைமான்கள், புள்ளிமான்கள், காட்டுப்பன்றிகள் அதிகம் - அன்னப்பறவைகள் அதிகம்.

**உதயமார்த்தாண்டபுரம்:**

திருத்துறைப்பூண்டியிலிருந்து 18 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. 111 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. ஆகஸ்டு முதல் மார்ச் வரை பறவைகள் வருகை அதிகம்.

**விராலிமலை:**

திருச்சியிலிருந்து 30 கி.மீட்டர் - மயில்கள் சரணாலயம்.

**ஆரியகுளம்:**

திருநெல்வேலியிலிருந்து 13 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. மார்ச் -ஜூன் வரை பறவைகள் வருகை.

**கூத்தகுளம்:**

திருநெல்வேலியிலிருந்து 30 கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

**வேட்டங்குடி:**

நீர்ப்பறவைகள், கொக்குகள் சரணாலயம். இராமநாதபுரம் அருகே உள்ளது.

**மூன்றடைப்பு:**

திருநெல்வேலி - கன்னியாகுமரி சாலையில் சுமார் 20 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. பெலிகன் பறவைகளுக்கான மையமாக அது செயல்படுகின்றது.

**கஞ்சிராங்குளம்:**

முதுகுளத்தூர் - அபிராமம் சாலையில் நான்கு கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. நவம்பர் முதல் பிப்ரவரி வரை பறவைகள் வருகின்றன.

## 24. தமிழக - விலங்குகள் சரணாலயங்கள்

**கிண்டி:**

27 ச.கி.மீட்டர் பரப்பில் கலைமான்கள், புள்ளிமான்கள், குரங்குகள் சரணாலயம் உள்ளது.

Scanned by CamScanner

**ஆனைமலை:**

கோயம்புத்தூரிலிருந்து தெற்கே 60 கி.மீட்டரில் உள்ளது. இந்திராகாந்தி வனவிலங்கு / புகலிடம் என்ற சரணாலயம் 1973 சனவரி 21-இல் டாப்ஸ்லிப் என்ற இடத்தில் அமைக்கப்பட்டது. 958 ச.கி.மீட்டர் பரப்புடையது. யானை, புலி, காட்டெருமை, சிறுத்தை, கரடி, காட்டுப்பன்றி, மான்கள், முள்ளம்பன்றி, புனுகுப்பூனை போன்றவை இங்கு உண்டு.

**முதுமலை:**

நீலகிரியில் முதுமலைக் காட்டில் உள்ளது. 321 ச.கி.மீட்டர் பரப்பளவு உடையது. புள்ளிமான்கள், காட்டெருமைகள், கரடி, புலி, சிறுத்தை, கழுதைப்புலி, புனுகுப்பூனை, சாம்பார் மான்கள், புள்ளிமான்கள், மலை ஆடுகள், குரங்குகள் எனப் பல விலங்குகள் இங்கே உண்டு.

**முண்டன்துறை:**

திருநெல்வேலிக்கு மேற்கே 42 கி.மீட்டர் தூரத்தில் உள்ளது. புலிகள் புகலிடம் - 567 ச.கி.மீட்டர் பரப்பளவு உடையது. ஜூன் முதல் செப்டம்பர் வரை பருவ காலம் - புலிகளுடன், மான்கள், சிங்கவால் குரங்குகள் உண்டு.

**களக்காடு:**

சிங்கவால் குரங்குகள் இங்கு அதிகம் - பறவைகளும், பாம்புகளும் இங்கு உண்டு.

## 25. 108 வைணவத் திருப்பதிகள்

### அ) சோழநாட்டுத் திருப்பதிகள் (40)

1. ஸ்ரீரங்கம், 2. உறையூர், 3. தஞ்சாவூர், 4. அன்பில், 5. கரம்பனூர் என்ற உத்தமர் கோயில் 6. திருவெள்ளறை 7. புள்ளம்பூதங்குடி 8. திருப்பேர் நகர், 9. ஆதனூர், 10. தேரெழுந்தூர், 11. சிறுபுலியூர், 12. திருச்சேறை, 13. நாண்மதியம், 14. திருக்குடந்தை, 15. கண்டியூர், 16, திருவிண்ணகர் (உப்பிலியப்பன் கோயில்), 17. திருக்கண்ணபுரம் , 18. திருவாலி திருநகரி, 19. நாகப்பட்டினம், 20. திருநாரையூர், 21. நந்திபுர விண்ணகரம், 22. திருவிந்தர், 23. தில்லை திருச்சித்திரக் கூடம், 24. திருக்காழிச் சிராமம், 25. திருஆடுதுறை, 26. திருக்கண்ணங்குடி, 27. திருக்கண்ணமங்கை, 28. கபிஸ்தலம், 29. திருவெள்ளியங்குடி, 30. மணிமாடக் கோயில் 31. வைகுந்த விண்ணகரம், 32. அரிய

Scanned by CamScanner

விண்ணகரம், 33. திருத்தேவனார் தொகை, 34. வண்புருடோத்தமம் 35. செம்பொன்செய்கோயில் 36. திருத்தெறியம்பலம் 37. திருமணிக்கூடம், 38. திருக்காவளம்பாடி, 39. திருவெள்ளக்குளம், 40. திருப்பார்த்தன்பள்ளி

**ஆ) பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் (19)**

41. திருமாலிருஞ்சோலை, 42. திருக்கோஷ்டியூர், 43. திருமெய்யம், 44. திருப்புல்லாணி, 45. திருத்தண்கால், 46. திருக்குருகூர், 47. திருத்தொலைவில்லி மங்கலம், 48. ஸ்ரீவரமங்கை (வானமாமலை) 49. திருப்பேரை, 50. ஸ்ரீவைகுண்டம், 51. திருப்புளியங்குடி, 52. திருவரகுணமங்கை, 53. திருக்குளந்தை, 54. திருக்குறுங்குடி, 55. திருக்கோர், 56. திருமோகூர், 57 திருக்கூடல், 58. திருவில்லிபுத்தூர்.

**இ) மலைநாட்டுத் திருப்பதிகள் (13)**

59. திருவனந்தபுரம், 60. திருவண்பரிசாரம், 61. திருகாட்கரை, 62. திருமூழிக்களம், 63. திருப்புலியூர், 64. திருச்செங்குன்றூர், 65. திருநாவாய், 66. திருவல்லவாழ், 67. திருவண்வண்டூர் 68. திருவட்டாறு, 69. திருவித்துவக்கோடு, 70. திருக்கடித்தானம், 71. திருவாறன்விளை

**ஈ) நடுநாட்டுத் திருப்பதிகள் (2)**

72. திருவாயிந்தரம், 73. திருக்கோவிலூர்

**உ) தொண்டை நாட்டுத் திருப்பதிகள் (22)**

74. திருக்கச்சி, 75. திருஅட்டபுயங்கரம், 76. திருத்தண்கா, 77. திருவெளுக்கை, 78. திருப்பாடகம், 79. திருநீரகம், 80. திருநிலாத்திங்கள் துண்டம், 81. திருவூரகம், 82. திருவெஃகா, 83. திருக்கரகம், 84. துரக்காரகம், 85. திருக்கள்வனூர், 86. திருப்பவளவண்ணம், 87. திருப்பரமேசுவர விண்ணகரம், 88. திருப்புட்குழி, 89. திருநின்றவூர், 80. திருவெவ்வுர், 91. திருநீர்மலை, 92. திருவிடவெந்தை, 93. திருக்கடல்மல்லை, 94. திருவல்லிக்கேணி, 95. திருக்கடிகை

**ஊ) வடநாட்டுத் திருப்பதிகள் (11)**

96. திருவேங்கடம் (திருப்பதி) 97. திருசிங்கவேள் குன்றம் (அகோபிலம்) 98. திருஅயோத்தி, 99. திருநைமி சாரண்யம், 100. திருசாளக்கிராமம், 101. திருவதிரியாச்ரமம், 102. திருகங்கைக்கரைக் கண்டம், 103. திருப்பிரிதி, 104. திருவடமதுரை, 105. திருத்துவாரகை, 106. திருஆய்பாடி (கோகுலம்)

**எ) நிலவுலகில் பார்க்க முடியாதவை (2)**

107. திருப்பாற்கடல், 108. திருப்பரமபதம்.

Scanned by CamScanner

## 26. நால்வர் பாடிய சைவத் திருத்தலங்கள்

### அ) தொண்டை வீடு

1. அச்சிறுப்பாக்கம், 2. அரசிலி (ஒழிந்தியாம்பட்டு), 3. திருவாலங்காடு, 4. இரும்பைமாகளம் (*திருமாகளம்), 5. தக்கோலம், 6. திருவொற்றியூர், 7. திருவோணகாந்தன்தளி, 8. திருவோத்தூர் (செய்யாது), 9. கச்சி அநேகதங்கவாதம் (காஞ்சி), 10. கச்சி ஏகம்பம், 11. கச்சிநெறிக்களுக்காடு (திருக்காளி மேடு) 12. கச்சி மேற்றளி (பிள்ளையார் பாளையம்), 13. திருக்கச்சூர், 14. திருக்கழுக்குன்றம், 15. திருக்கற்றில், 16. திருக்காளத்தி (காளஹஸ்தி) 17. குரங்கணிலி முட்டம், 18. பனங்காட்டூர் (திருப்பனங்காடு), 19. திருப்பாச்சூர், 20. திருமயிலை, 21. திருமாகறல் 22. திருமாற்பேறு (திருமால்பூர்), 23. வடதிருமுல்லை வாயில், 24. திருவக்கரை, 25. திருவலிதாயம், 26.. திருவல்லம், 27. திருவான்மியூர், 28. திருவெண்பாக்கம் (பூண்டி) 29. திருவேற்காடு, 30. இலம்பையங்கோட்டூர் 31. இடைச்சுரம் (திருவடி சூலம்)

### ஆ) சோழ நாட்டு வடகரைத் தலங்கள்

1. அன்பிலாந்துளை (கீழ்அன்பில்) 2. திருவாய்ப்பாடி, 3. திருவானைக்காவல், 4. திருஇன்னம்பர், 5. திருஎதிர்கொள்பாடி (திருமணஞ்சேரி), 6. திருவையாறு, 7. திருஓமம் புலியூர், 8. திருக்கஞ்சனூர், 9. திருக்கடம்பூர், 10. கண்ணார்கோயில் (குறுமானக்குடி), 11. கருப்பறியலூர் (தலைஞாயிறு), 12. கலிக்காமூர் (அன்னப்பன் பேட்டை), 13. திருக்கழிப்பாலை, 14. திருக்காட்டுப்பள்ளி, (ஆரண்யேசுரர் கோயில்), 15. பல்லவனிசுவரம், 16. சீர்காழி, 17. கானாட்டு முள்ளூர் (கானாட்டம் புலியூர்), 18. திருக்கானூர், 19. திருக்குரக்காவல், 20. வடகுரங்காடுதுறை (ஆடுதுறைக்கோயில்), 21. திருக்குரகாவூர், 22. திருக்குறுக்கை, 23. திருக்கண்டீச்சுரம், 24. திருக்கோடிக்காவல், 25. கோயில் என்ற சிதம்பரம், 26. திருச்சாய்க்காடு என்ற சாயாவனம், 27. சேய்ஞ்ஞலார், 28. திருந்துதேவன் குடி (நண்டாங்கோயில்), 29. நல்லூர் பெருமணம் (ஆச்சாள்புரம்), 30. திருநாரையூர், 31. திருநின்றவூர், 32. திருநெய்த்தானம், 33. திருநெல்வாயில் (சிவபுரி), 34. பந்தணைநல்லூர் (பந்தநல்லூர்), 35. திருப்பழனம், 36. பழவூர் (கீழப்பழுவூர்), 37. திருப்பனந்தாள், 38. திருப்பாச்சிபாச்சிரமம் 39. பாற்றுறை (திருப்பாலத்துறை), 40. புள்ளிருக்கு வேளூர், (வைத்தீஸ்வரன் கோயில்), 41. திருப்புறம்பியம், 42. திருப்புன்கூர், 43. திருப்பெரும்புலியூர், 44. திருப்பைஞ்ஞீலி, 45. திருமங்கலக்குடி, 46. திருமணஞ்சேரி 47. பழமண்ணபடிக்கரை (இலப்பைப்பாட்டு),

Scanned by CamScanner

48. மகேந்திரபள்ளி (கோயிலடி பாளையம்), 49. திருமழபாடி, 50. திருமாந்துறை, 51. தென்திருமல்லைவாயில், 52. திருவாழ் கொளிப்புத்தூர் (திருவாளப்புத்தூர்), 53. திருவிஜயமங்கை, 54. திருவெண்காடு, 55. திருவேட்களம், 56. திருவைகாவூர், 57. திருஈங்கோய்மலை, 58. திருநீரூர், 59. திருவிசலூர்.,

### இ) நடுநாட்டுத் தலங்கள்

1. திருவண்ணாமலை, 2. அதிகை வீரட்டம் (திருவதிகை), 3. அறையணி நல்லூர் (அரகண்ட நல்லூர்), 4. திருஆமத்தூர், 5. இடையாறு, 6. எருக்கத்தம்புலியூர் (இராஜேந்திரபட்டிணம்), 7. திருக்கூடலையாற்றூர், 8. திருக்கோவலூர் (திருக்கோயிலூர்), 9. சோபுரம் (தியாகவல்லி), 10. தினைநகர் (தீர்த்தனகிரி), 11. துறையூர் (திருத்தர்), 12. திருநாவலூர், 13. நெல்வாயில் அறத்துறை (திருவத்துறை), 14. திருப்பாதிரிப்புலியூர் (கடலூர்), 15. பறுவார் பனங்காட்டூர் (பனையபுரம்), 16. பெண்ணாகடம், 17. திருமாணிக்குழி, 18. திருமுண்டீச்சுரம், 19. திருமுதுகுன்றம் (விருத்தாசலம்), 20. வருகூர் (ஆண்டார்கோயில்), 21. திருவெண்ணெய் நல்லூர், 22. நெய்வெண்ணெய் (நெய்வினை)

### ஈ) சோழ நாட்டுத் தென்கரைத் தலங்கள்

1. அகத்தியான்பள்ளி (அகஸ்தியம்பள்ளி), 2. அம்பர் பெருந்திருக்கோயில், 3. அம்பர் மாகாளம் (கோயில்திருமாளம்), 4. அரதைப் பெரும்பாழி (ஹரித்துவாரமங்கலம்), 5 அரிசிற்கரைபுத்தூர் (அழகாபுத்தூர்), 6. அவளிவணல்லூர், 7 தேரெழுந்தூர், 8. வன்னியூர், 9. ஆக்கூர், 10. ஆரூர் பறவையுண்டமண்டளி (தாவர நாயனன் கோயில்), 12 ஆலம்பொழில் (திருவாம்பொழில்), 13. திருஆவடுதுறை, 14 பசுபதீஸ்வரம், 15. இடும்பாவனம், 16. திருவிடைமருதூர், 17 இராமனதீச்சுரம் (திருக்கண்ணபுரம்), 18. இரும்புளை (ஆலங்குடி), 19. வசாத்தானம் (கோயிலூர்), 20. எறும்பியூர் (திருவெறும்பூர்), 21. கடம்பொன்துறை (குளித்தலை), 22. கடவூர் (திருக்கடையூர்), 23. கடவூர் மயானம், 24. கடிக்குளம் (கற்பகனார்கோயில்), 25. கடுவாய்க்கரை புத்தூர் (ஆண்டார் கோயில்), 26. கடமுடி (கீழுர்), 27. திருக்கண்டியூர், 28. கரவீரம் (கரையபுரம்), 29. கருவாவூர் (திருக்களாவூர்), 30. கருக்குடி (மருதாந்தநல்லூர்), 31. கருவிலிக் கொட்டிடை (கருவேலி), 32. கலையநல்லூர்,(சாக்கோட்டை), 33. திருக்களர், 34. கற்குடி (திருக்கண்டலம், உய்யக்கொண்டான்மலை), 35. கற்றாப்பூர் (கண்ணாப்பூர்), 36. திருக்காட்டுப்பள்ளி, 37. காறாயில்

Scanned by CamScanner

(காரவாயில்), 38. கீழ்வேளூர் (கீவளூர்), 39. குடந்தைக்காரோணம் (சோமேசர் திருக்கோயில்), 40. குடந்தை கீழ்க்கோட்டம் (நாகேஸ்வர சாமி கோயில்), 41. குடமூக்கு (கும்பகோணம்), 42. திருக்குடவாசல், 43. தென்குரங்காடு துறை (ஆடுதுறை), 44. கைச்சனம் (கச்சனம்), 45. கொண்டீச்சரம் (திருக்கண்டீச்சரம்), 46. கொல்லம்புத்தூர் (திருக்களம்புதூர்), 47. கொள்ளிக்காடு, 48. கோடிக்கரை, 49. கோட்டாறு (கொட்டாரம்), 50. கோட்டூர், 51. கோழம்பம் (திருக்குழம்பியம்), 52. கோளிலி (திருக்குவளை), 53. சக்கரப்பள்ளி (ஐயம்பேட்டை), 54. சத்திமுற்றம், 55. சாத்தமங்கை (சீயாத்த மங்கை), 56. திருச்சிக்கல், 57.திருச்சிராப்பள்ளி, 58. சிவபுரம், 59. சிறுகுடி, 60. சிற்றேமம், 61. திருச்செங்காட்டங்குடி, 62. திருச்சேரையுடையார், 63. செம்பொன்பள்ளி (செம்பனார்கோயில்), 64. திருச்சோற்றுத்துறை, 65. தண்டலை நீளநெறி (தண்டளச்சேரி) 66. தருமபுரம், 67. தலைச்செங்கோடு, 68. தலையாலங்காடு, 69. தில்லைப்பதி 70. துருத்தி (குற்றாலம்), 71. தெங்கூர் (திருத்தெங்கூர்), 72. தெளிச்சேரி (காரைகோயில் 10), 73. தென்குடித்திட்டை, 74. திருத்தேவூர், 75. நல்லம் (கோனேரி ராஜபுரம்), 76. திருநல்லூர், 77. திருநள்ளாறு, 78. திருநாரையூர், 79. நனிப்பள்ளி (புஞ்சை), 80. நன்னிலம் 81. திருநாகேச்சுரம், 82. நாகைக்காரோணம் (நாகப்பட்டிணம்), 83. நாட்டியத்தாங்குடி, 84. நாலூர் மயானம் 85. நீலக்குடி (தென்ளைக்குடி), 86. நெடுங்குளம், 87. திருநெல்லிக்காவல், 88. திருப்பட்டீச்சுரம் 89. பயற்றூர் (திருப்பயத்தங்குடி), 90. திருப்பராய்த்துறை, 91. பரிதி நியமம் (பருத்தியப்பர் கோயில்), 92. பழையாறை வடதளி, 93. பறியலூர் (பரசலூர்), 94. திருப்பனையூர், 95. பாதாளேச்சுரம் (பாம்பணி), 96. திருப்பாம்பரம், 97. திருப்பாலத்துறை, 98. புகளூர், 99. வர்த்தமானீச்சுரம், 100. புள்ளமங்கை (பசுபதி கோயில்), 101. திருப்பூந்துருத்தி, 102. திருப்பூவனூர், 103. பெருவேலூர் (மணக்கால் ஐயம்பேட்டை), 104. பேணு பெருந்துறை (திருப்பண்துறை), 105. பேரெயில் (ஓகைப் பேரையூர்), 106. மயிலாடுதுறை (மாயவரம்), 107. திருமருகல், 108. வேதாரண்யம் (திருமறைக்காடு), 109. திருமீயச்சூர், 110. திருமுக்கீச்சுரம் (உறையூர்), 111. திருவலஞ்சுழி 112. திருவலம்புரம் (மேலப்பெரும் பள்ளம்), 113, வலிவலம், 114. திருவாஞ்சியம் 115. திருவாட்போக்கி (ஐயர்மலை), 116. திருவாய்மூர் 117. திருவிளநகர், 118. திருவிளமல், 119. திருவிற்குடி, 120. திருவீழிமிழலை, 121. திருவண்டுறை, 122. கோயில்வெண்ணி, 123. திருவேட்டக்குடி, 124. திருவேதிக்குடி, 125. வைகல் மாடக்கோயில், 126. திருவிடைவாயில், 127. கிளியனூர்.

Scanned by CamScanner

உ. பாண்டிய நாட்டுத் திருத்தலங்கள்

*1. திருவாடனை, 2. ஆப்பனூர், 3. ஆலவாய் (மதுரை), 4. இராமேஸ்வரம், 5. திருவேடகம், 6. கானப்பேர் (காளையார் கோயில்), 7. குற்றாலம், 8. கொடுங்குன்றம் (பிரான்மலை), 9. சுழியல் (திருச்சுழி), 10. திருநெல்வேலி, 11. திருப்பரங்குன்றம், 12. திருப்பத்தூர், 13. திருப்புனவாயில், 14. திருப்பூவனம், 15. திருஉத்திரகோசமங்கை, 16. ஆவுடையார்கோயில்*

ஊ.வடநாட்டுத் திருத்தலங்கள்

*1. அநேகதங்பாதம் (கௌரி குண்டம்), 2. இந்திர நீலபருப்பதம் 3. நொடித்தான்மலை (திருக்கயிலாயம்), 4. கேதாரம்.*

எ. துளுவ நாட்டுத் திருத்தலங்கள்

*1. கோகர்ணம்.*

ஏ. கொங்கு நாட்டுத் திருத்தலங்கள்

*1. அவிநாசி (திருப்புக்கொளியூர்), 2. கருவூர் (கரூர்), 3. கொடிமாடச் செங்குன்றூர் (திருச்செங்கோடு), 4. நணா (பவானி), 5. பாண்டிக்கொடுமுடி (கொடுமுடி), 6. வெஞ்சமாக்கூடல்*

ஐ) மலைநாட்டுத் தலங்கள்

*1. அஞ்சைக் களம் (திருவாஞ்சிகுளம்)*

ஒ) ஈழநாட்டுத் தலங்கள்

*1. கேதீச்சரம், 2. கோணமலை (திரிகோணமலை)*

## நிறைவாக:

சுற்றுலாவிற்கு முன் ஏற்பாடு

விவேக சிந்தாமணியில் சுற்றுலாவிற்கு எந்தெந்தப் பொருட்களைக் கொண்டு செல்லல் நலம் பயக்கும் என்பது குறித்த பாடல் ஒன்று உண்டு. அது பின்வருமாறு;

"தண்டுல மிளகின் தூள் புளி உப்பு
தாளிதம் பதார்த்தம் எதேஷ்டம்
தாம்புநீர் தோற்றம் ஊன்றுகோல் ஆடை

கிமுக்கி கைராந்தல்
கண்டகம் காண்பான் பூசை முஸ்தீபு

Scanned by CamScanner

கமற்குடை ஏவல் சிற்றுண்டி
கம்பளி ஊசி நூல் எழுத்தாணி
கரண்ட கண்கண்ட மேற்றங்கி
துண்டும் மோரியக்காய் கரண்டி
நல்லெண்ணெய்
துட்டுடன் பூட்டுமே கத்தி
சொல்லிவெல்லாம் குறைவரத் திருத்தி
தொகுத்துப் பல்வகையினை இனிதமைத்து
பெண்டுகள் துணையோடு
எய்து வாகணணாய்
பெருநிலை நீர்நிழல் விறகு
பிரஜையும் தங்குமிடம் சமைத்துண்டு
புறப்படல் யாத்திரைக் கழகே."

பாவேந்தர் பாரதிதாசனும் இது குறித்துப் பாடல் ஒன்று புனைந்துள்ளார்.

"சீப்புக் கண்ணாடி ஆடை சிறுகத்தி
கூந்தல் எண்ணெய்
சோப்பு பாட்டரி விளக்குத்தூக்கு
கூஜா தாள் பென்சில்
தீப்பெட்டி கவிகை சால்வை
செருப்புக் கோவணம் படுக்கை
காப்பிட்ட பெட்டி ரூபாய்
கைக்கொள்க யாத்திரைக்கே!

எனவே நாமும் சுற்றுலாச் செல்வோம். மன நிம்மதி அடைந்து வாழ்வில் ஆனந்தம் பெற்று மகிழ்வோம்.

✪ ✪ ✪

## துணைநின்ற நூல்கள்:

1. இராஜசேகர தங்கமணி ம. ***சுற்றுலாவியல்***, கொங்குப் பதிப்பகம், கரூர், முதற்பதிப்பு, 1992
2. கிருட்டிணசாமி, வெ. ***சுற்றுலாவளர்ச்சி***, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108, முதற்பதிப்பு.1986

✪ ✪ ✪

Scanned by CamScanner

மிகுதியான தேவை, மக்களின் பற்றின்மை போன்றவை சுற்றுலாத் துறையில் சிக்கல்களை உருவாக்கும்.

சுற்றுலாவில் அழிந்து போகின்ற பொருட்களும் உள்ளன. ஒரு வானொலிப் பெட்டி அல்லது குளிர்சாதனப் பெட்டியை உற்பத்தி செய்தால், அது இன்று விற்காவிடினும் நாளை விற்றுவிடும். அதனால் மிகுதியான பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படப்போவதில்லை. ஆனால் சுற்றுலாவுடன் தொடர்புடைய தங்கும் விடுதியில் உள்ள அறைகளில் ஒரு நாள் இரவு பயணிகள் தங்காவிடில் இழப்பு ஏற்படும். அதுபோல் வானூர்தியில் ஓரிடம் காலியாகச் சென்றாலும், அஃது இழப்பையே தரும்.

## வணிகமாக்குவதற்குரிய வழிகள்

சுற்றுலாத் துறையின் விற்பனை முறையை எளிமைப்படுத்தி, மேம்படுத்தத் தேவையான வழிவகைகளை ஆராய வேண்டும். சுற்றுலாத் துறையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விலையைப் பகுத்தாய்வது. பகிர்ந்தளிக்கும் தன்மைக்குத் துணையாக இருக்கும். காலத்திற்கு ஏற்றாற்போல் தொழில் நுணுக்கத்துடன் சுற்றுலா மையங்களில் மாற்றம் செய்ய வேண்டும். மக்களின் உண்மையான தேவையையும், அளவையும், மனநிறைவையும் அறிந்து செயல்பட வேண்டும். புதுமையை ஏற்காமல் பழமையை விடாப்பிடியாகப் பிடித்திருப்பவர்கள் வணிகத்தில் தோல்வியுறுவர். நாகரிகம் வளர வளரப் பயணிகள் முதல்தரமான வசதிகளையே பெற விரும்புகின்றனர்.

சுற்றுலாவை வணிகப்படுத்துவதன் மூலம் பொருளாதார நடவடிக்கை விரிவடைந்து நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்பாடு அடையும். அதற்குத் தகுந்த சுற்றுலாக் கொள்கைகளை உருவாக்க வேண்டும்.

# 3.5 சுற்றுலாவின் வழிகாட்டிகள்

ஒரு செய்தியைப் புதியவர்களிடமும், வெளிநாட்டினரிடமும், வேற்று மொழியாளர்களிடமும், விளக்கிக் கூறுவதற்குப் பயிற்சி தேவை ஓரிடத்தைப் பற்றியோ ஒரு நிகழ்ச்சியைப் பற்றியோ, முற்றிலும் புதியவர்களுக்கு அவர்களுக்குப் புரியும்படியாக அவர்களுக்குத் தெரிந்த மொழியில் எடுத்துரைத்து வழிகாட்டுபவரை வழிகாட்டி எனலாம். முற்றிலும் புதியவர் கேட்கும் வினாக்களுக்குப் பதில் கூறி அவருடைய ஐயங்களைப் போக்க வேண்டும்.

Scanned by CamScanner

## வழிகாட்டியின் பண்புகள்

வழிகாட்டிக்கு 1. நல்ல உடல் தோற்றம், 2. குரல் வளம், 3. பேச்சுத் தெளிவு, 4. நினைவாற்றல், 5. சுற்றுலா இடங்களைப் பற்றிய நல்லறிவு 6. பன்மொழிப்புலமை 7. மற்றவர்களின் பண்பாட்டை அறிந்து ஒழுகும் தன்மை போன்ற தகுதிகள் இருக்க வேண்டும்.

## உடல் தோற்றம்

வழிகாட்டிக்கு நல்ல உடல் நலம் தேவை. சுவரை வைத்துத்தான் சித்திரம் வரைய முடியும். நல்ல உடல்நலம் உள்ளவர்களே பயணிகளைத் தூரமான இடங்களுக்கு அழைத்துச் செல்ல முடியும். அவ்விடங்களில் கிடைக்கும் உணவுகளை உண்ண முடியும். பயணிகள் புதிய இடங்களைக் காணும் ஆவலில் பயணம் செய்கின்றனர். ஆனால் வழிகாட்டிக்கு அவ்விடங்களைப் பற்றி முழுமையாகத் தெரியும். எனவே தூரமான இடங்களுக்குப் பயணம் செய்யவும், புதிய இடத்தில் உணவு உண்ணவும், பயணிகளிடையே எப்பொழுதும் மகிழ்ச்சியாகச் சிரித்த முகத்துடன் இருக்கவும், எந்த நேரத்திலும் பயணிகளுடன் பயணம் செய்யவும் நல்ல உடல் நலம் தேவை.

வழிகாட்டிக்குக் கண்தான் மிகவும் முதன்மையானது. பயணிகள் வழிகாட்டியின் கண்களைப் பார்க்கின்றனர். ஒவ்வொரு வழிகாட்டியின் கண்களும் பேச வேண்டும். வழிகாட்டியின் உணர்ச்சிகள் கண்களில் வெளிப்பட வேண்டும்.

வழிகாட்டி நல்லத் தோற்றப் பொலிவுடன் இருக்க வேண்டும். துப்புரவான உடைகளை உடுக்க வேண்டும். அவ்வக்கால நாகரிக உடைகளை அணிய வேண்டும். வேற்று நாட்டவரை அழைத்துச் செல்லும்பொழுது, அவர்கள் விரும்பும் உடைகளை உடுத்தவேண்டும். அதேநேரத்தில் நம் நாட்டுப் பண்பாட்டினை விளக்கிக் காட்டும் வகையில் அமைந்திருக்க வேண்டும். நாகரிகம் என்ற பெயரில் ஆபாசமான உடைகளை அணியக் கூடாது. எப்பொழுதும் சிரித்த முகத்துடனும், நல்ல தோற்றத்துடனும், சுறுசுறுப்புடனும் இருக்க வேண்டும்.

## குரல் வளம்

சுற்றுலாப் பயணிகளுக்குச் செய்திகளைக் கூறுவதற்கு நல்ல குரல் வளத்தைப் பெற்றிருக்க வேண்டும். மென்மை,

வன்மை, குழைவு, அன்பு, தெளிவு போன்றவை வழிகாட்டியின் குரலில் அமைந்திருக்க வேண்டும். செய்திகளை விளக்கிக் கூறுவதற்குக் கருத்துத் தெளிவுடன், குரல் தெளிவும் இருக்க வேண்டும். சொற்களைச் சரியாக உச்சரிக்க வேண்டும். சொற்களின் இடமறிந்து, கருத்தறிந்து, பயணிகளின் பண்பறிந்து அழுத்தமாகவும், மென்மையாகவும் பேச வேண்டும்.

## பேச்சுத் தெளிவு

பேச்சுத்திறன் என்பது வெளிப்படையாகத் தெரியாத உடற்கூறு இயல்புகளில் ஒன்றாகும். சொல்லும் பொருளில் தெளிவு இருக்கவேண்டும். கருத்துக்களை முன்பின் முரணாகப் பேசக்கூடாது. சொல்லும் செய்திகளை ஆணித்தரமாகச் சொல்லவேண்டும். பயணிகள் அநுபவித்துக் கேட்கும்படிப் பேச்சு இருக்க வேண்டும். எந்த மொழியில் பேசினாலும், அப்பேச்சில் மொழித்தெளிவு இருக்க வேண்டும். பயணிகளின் மனநிலையை அறிந்து பேச வேண்டும். உணர்ச்சி வசப்பட்டுப் பேசக்கூடாது. நகைச்சுவையுடன் பேசப் பழகிக் கொள்ள வேண்டும். நகைச்சுவை மற்றவர்களைக் கவரும்.

## நினைவாற்றல்

வழிகாட்டிக்கு நல்ல நினைவாற்றல் இருக்க வேண்டும். ஓரிடத்துச் செய்தியை இன்னோர் இடத்தில் தவறாகக் கூறக்கூடாது. நிகழ்ச்சிகளை முறையாகவும், தெளிவாகவும் முதலில் சொல்ல வேண்டியதை முதலிலும் சொல்ல வேண்டும். எந்த ஒரு சிறு செய்தியையும் மறக்காமல் சொல்லவேண்டும். ஒரு செய்தியைச் சொல்கிறோம் என்னும் உணர்வு இல்லாமல், ஒரு செய்தியைச் சொல்லிக் கொடுக்கிறோம் என்னும் உணர்வுடன் வழிகாட்டி செயல்பட வேண்டும்.

## சுற்றுலா இடங்களைப் பற்றிய நல்லறிவு

வழிகாட்டி சுற்றுலா இடங்களைப் பற்றிய நல்லறிவு பெற்றிருக்க வேண்டும். அவ்விடங்களின் பரப்பளவு, பார்க்க வேண்டிய இடங்கள், வாகன வசதிகள், தங்கும் வசதிகள், எந்தக் காலத்தில் அவ்விடத்திற்குச் செல்ல வேண்டும்? எவ்வழியாகச் செல்வது நல்லது? போன்ற செய்திகளை அறிந்திருக்க வேண்டும். பயணிகளின் வினாக்களுக்கு உடனுக்குடன் பதிலளிக்க வேண்டும். பிறநாட்டுப் பிரதம மந்திரிகள், குடியரசுத் தலைவர், அரசி, அரசன் போன்றோருக்கு வழிகாட்டியாகச் செல்லும் முன் ஒத்திகை பார்த்துக் கொள்வது நல்லது.

Scanned by CamScanner

## பன்மொழிப் புலமை

சுற்றுலா வழிகாட்டிக்குப் பன்மொழிப் புலமை தேவை. ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற மொழிகளுடன் இந்தியும் தெரிந்திருக்க வேண்டும். வெளிநாட்டினரிடம் அவர்கள் மொழியில் பேசும்பொழுது மகிழ்ச்சி அடைகின்றனர். அவர்களது மொழியில் வணக்கம், நன்றி போன்ற சொற்களைக் கூறும்பொழுது அவர்களது மகிழ்ச்சி இரண்டு மடங்காகிறது. எனவே வெளிநாட்டு மொழியில் பேசமுடியாவிட்டாலும், ஒவ்வொரு மொழியிலும் சில தேவையான சொற்களை அறிந்திருப்பது நல்லது.

## பல்துறையறிவு

நம் நாட்டின் பண்பாட்டை விளக்ககூடிய இலக்கியங்கள், புராணங்கள், நாட்டுப்புற இலக்கியங்கள், கரகம், காவடி, சிலம்பம், கழைக்கூத்து, பொய்க்கால் குதிரையாட்டம், மஞ்சுவிரட்டு போன்ற நாட்டுப்புற விளையாட்டுக்கள், கலைகள், நாதசுரம், மிருதங்கம், கருநாடக இசை, திரைப்படக் கொட்டகைகள், நாடகக் கொட்டகைகள் போன்றனவற்றை அறிந்திருக்க வேண்டும். செய்திகளைக் கூறும்பொழுது நடுநிலைமையோடு பேச வேண்டும். பிறர் மனம் நோகும்படிப் பேசக்கூடாது. பயணிகளின் மனத்தில் உண்மையான அறிவைக் கொடுத்து, மனமாற்றத்தை உண்டு பண்ணி, அவரை மறுபடியும் அங்கு வரும்படித் தூண்டவேண்டும்.

## மற்றவர்களின் பண்பாட்டை அறிந்து ஒழுகுதல்

வாயாடியான பயணி, விவாதிக்கும் பயணி, அமைதியான பயணி, கேலி பேசும் பயணி, துடுக்கான முரட்டுத்தனமான பயணி, வெளிப்பகட்டான பயணி, நாணயமான எளிமையான பயணி, பொறுமையற்ற பயணி எனப் பயணிகள் பலவகைப்படுவர். அவர்கள் பல்வேறு நாட்டைச் சார்ந்தவர்களாக இருப்பர். அவர்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், உணவு முறைகள், நடை உடை பாவனைகள், சமயப் பண்பாடுகள் போன்றனவற்றை அறிந்து அவர்களிடம் பழக வேண்டும். பயணிகள் எதை விரும்பி வந்துள்ளனர் என்பதை அறிந்து விளக்க வேண்டும். வழிகாட்டி கூறும் செய்திகள் பயணிக்குக் களிப்பூட்டி உணர்ச்சியைத் தூண்டக் கூடிய முறையில் இருக்க வேண்டும். ஓரிடத்தைப் பற்றிப் பயணியிடம் அறிவொளி பரப்பி மீண்டும்

Scanned by CamScanner

அவ்விடத்திற்கு வரவழைப்பதே வழிகாட்டியின் பணியாகும். பயணியிடம் கல்வி அறிவோடு கலையறிவையும் பரப்ப வேண்டும்.

வழிகாட்டி தன்னம்பிக்கை உள்ளவராகவும், உண்மையானவராகவும், நம்பத்தகுந்தவராகவும், திண்ணியராகவும், கற்பனைத் திறம் உள்ளவராகவும், நல்ல நடத்தை உள்ளவராகவும், தன்னைத்தானே நிருவகிக்கும் திறமை உள்ளவராகவும், உற்சாகம் நிறைந்தவராகவும், பண்போடு நடக்கக் கூடியவராகவும், நட்புடன் உதவுபவராகவும், இடம் கண்டு சிரிக்கக் கூடியவராகவும், உரையாடும் திறம் உடையவராகவும், கலை நுணுக்கங்கள் அறிந்தவராகவும், அறிவாற்றலுடன் ஆழ்ந்து பணியாற்றும் சிறப்புடையவராகவும், எச்செயலையும் குறித்த காலத்தில் செய்யக்கூடியவராகவும், நுண்ணறிவோடு சூழலுக்கு ஏற்பச் செயல்படும் திறன் உடையவராகவும், கடின உழைப்பு உடையவராகவும் இருக்க வேண்டும்.

## பயிற்சி அளித்தல்

சுற்றுலா வளர்ச்சிக்கு உறுதுணையாகப் போதுமான சுற்றுலா வழிகாட்டிகள் (துணைவர்கள்) இருப்பது இன்றியமையாதது. முக்கியமாக வெளிநாட்டுப் பயணிகளுக்கு அவர்களின் உதவி மிகத் தேவையாகும். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் ஏறத்தாழ 50 பட்டதாரிகளுக்கு வழிகாட்டிப் பயிற்சி அளிக்கப் பெற்றது. அப்பயிற்சியின் கால அளவு மூன்று மாதங்களாகும்.

தமிழக அரசு சுற்றுலா வழிகாட்டிகள் பயிற்சி திட்டம் ஒன்றினை நடத்தி 24 சுற்றுலாத் துணைவர்களுக்குப் பயிற்சி அளித்தது ஒரு முக்கியச் சாதனையாகும். சுற்றுலா வளர்ச்சிக்குச் சுற்றுலா வழிகாட்டிகளும் பாடுபடுகின்றனர்.

Scanned by CamScanner